பகுதிகளையெல்லாம் நாங்களே செய்து உங்களிடத்தில் ஒப்படைத்துவிடுகிறோம் என்று அவர்கள் வாக்குறுதி கொடுத்திருக்கிறார்கள். அந்த வாக்குறுதியின் அடிப்படையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட கும்பகோணம் பழைய சாலை குறித்துக் கடிதம் கொடுக்கப்பட்டு, விரைவிலே அதற்கான ஒப்புதலையும், நிதியையும் கொடுக்கிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். எனவே, அந்தப் பணிகளைக் கட்டாயம் நாங்கள் விரைந்து செய்து முடிப்போம். புதிய சாலைகளையும் 2022 ஆம் ஆண்டுக்குள் முடிப்பதற்கு இந்த அரசு முனைப்போடு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 245, மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. அரவிந்த் ரமேஷ், மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

245—

உடற்பயிற்சிக் கூடம்

***2582—திரு. ச. அரவிந்த் ரமேஷ்:**

மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோழிங்கநல்லூர் தொகுதி, புனித தோமையார் மலை ஒன்றியத்திற்குட்பட்ட அனைத்து ஊராட்சிகளிலும் ஆண்கள் மற்றும் பெண்களுக்குத் தனித்தனியாக உடற்பயிற்சிக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

சோழிங்கநல்லூர் சட்டமன்றத் தொகுதி, புனித தோமையார் மலை ஊராட்சி ஒன்றியத்தில் உள்ள அனைத்து ஊராட்சிகளிலும் தனித்தனியாக ஆண்களுக்கும், பெண்களுக்கும் உடற்பயிற்சிக் கூடம் அமைக்க வரும் நிதியாண்டில் ஏதேனும் ஒரு திட்டத்தின்கீழ் பணி மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. அரவிந்த் ரமேஷ் அவர்கள்.*

2022 மே 9]

திரு. ச. அரவிந்த் ரமேஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழிங்கநல்லூர் தொகுதி, புனித தோமையார் மலை ஒன்றியத்திற்குட்பட்ட மேடவாக்கம், கோவிலம்பாக்கம், பெரும்பாக்கம், வேங்கைவாசல், நன்மங்கலம், சித்தாலப்பாக்கம், ஒட்டியம்பாக்கம் ஆகிய 7 ஊராட்சிகளில் 1,88,000–க்கும் மேல் வாக்காளர்களைக் கொண்டு, மாநகருக்கு ஈடாக வளர்ந்து வரும் பகுதியாக உள்ளது. இந்த ஊராட்சிகளில் ஆண்கள் மற்றும் மகளிருக்குத் தனித்தனியே உடற்பயிற்சிக் கூடங்கள் இல்லாமல் உள்ளன. எனவே, மேற்சொன்ன அனைத்து ஊராட்சிகளிலும் ஆண்களுக்கும், மகளிருக்கும் தனித்தனியாக நவீன உடற்பயிற்சிக் கூடம் அமைக்க அரசு முன் வரவேண்டுமென மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குறிப்பாக வேங்கைவாசலில் ஏற்கெனவே ரூ.5 இலட்சம் மதிப்பீட்டில் உடற்பயிற்சி உபகரணங்கள் வாங்கப்பட்டு, பயன்பாட்டில் இருந்து வருகின்றது. அதைப்போல, பெரும்பாக்கம், மேடவாக்கம் மற்றும் கோவிலம்பாக்கம் ஆகிய மூன்று ஊராட்சிகளில் உடற்பயிற்சிக் கூடங்கள் அமைப்பதற்குப் போதிய இடவசதி இருக்கிறது. ஆகவே, வரும் நிதியாண்டில் ஒவ்வோர் ஊராட்சியிலும் ரூ.15 இலட்சம் மதிப்பீட்டில் உடற்பயிற்சிக் கூடம் அமைப்பதற்கான பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மேலும், சித்தாலப்பாக்கம், ஒட்டியம்பாக்கம் ஆகிய ஊராட்சிகளில் உடற்பயிற்சிக் கூடம் அமைப்பதற்கு இடம் தேர்வு செய்யப்பட்டு வருகிறது. அதற்குத் தோதான இடம் கண்டறியப்பட்டவுடன் 'நமக்கு நாமே திட்டம்' போன்ற திட்டங்களின்மூலம் அப்பணிகளைச் செய்யலாம். ஒருவேளை மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் உடனடியாக முயற்சி செய்து, மூன்றில் ஒரு பங்கு பொதுத் தொகையைச் செலுத்தினால் போதும். ஆதி திராவிடர் பகுதிகளில் உடற்பயிற்சிக் கூடம் அமைக்க விரும்பினால், ஐந்தில் ஒரு பங்கு தொகையைச் செலுத்தினால் போதும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

நன்மங்கலம் ஊராட்சியில் உடற்பயிற்சிக் கூடம் அமைக்கப் போதிய இடம் இன்னும் அமையவில்லை. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட வேங்கைவாசல், பெரும்பாக்கம், மேடவாக்கம், கோவிலம்பாக்கம், சித்தாலப்பாக்கம், ஒட்டியம்பாக்கம், நன்மங்கலம் ஆகிய 7 ஊராட்சிகளிலும் எதிர்காலத்தில் உடற்பயிற்சிக் கூடங்கள் அமைப்பதற்கு நிச்சயமாக முயற்சிகள் மேற்கொள்ளப்படும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ச. அரவிந்த் ரமேஷ் அவர்கள்.*

திரு. ச. அரவிந்த் ரமேஷ்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உடற்பயிற்சிக் கூடங்கள் அமைத்துத் தரப்படும் என்று அறிவித்த மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சோழிங்கநல்லூர் தொகுதி, அதிக இளைஞர்களைக் கொண்ட தொகுதியாகும். அவர்களுடைய உடல் திறனை மேம்படுத்திக்கொள்ள, உடற்பயிற்சியில் தங்களை ஈடுபடுத்திக்கொள்ள வேண்டிய கட்டாயத்தில் இளைஞர்கள் ஆர்வமாக உள்ளார்கள். அதற்கு நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களே முன்னுதாரணமாகத் திகழ்கிறார்கள்.*

குறிப்பாக, புனித தோமையார் மலை ஒன்றியத்திற்குட்பட்ட பெரும்பாக்கம் ஊராட்சியில் தமிழ்நாடு நகர்ப்புர வாழ்விட மேம்பாட்டு வாரியக் குடியிருப்புப் பகுதியிலுள்ள AE Block*–களில் உள்ள எண்கள் 71, 103 உடற்பயிற்சிக் கூடத்திற்கெனக் கட்டப்பட்ட கட்டடம் 7 ஆண்டுகளாகப் பயன்பாட்டுக்குக் கொண்டுவர முடியாமல் உள்ளது. எனவே, உடற்பயிற்சிக் கூடத்திற்கு நவீன உடற்பயிற்சி உபகரணங்களை வழங்கி இளைஞர்கள் பயன்பெறும் வகையில் பயன்பாட்டுக்குக் கொண்டு வரவேண்டுமென மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.*

தமிழக முதல்வர் அவர்கள் இளைஞர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் வகையில் இளைஞர்கள் நலன் சார்ந்த அறிவிப்புகளை வெளியிட்டதற்கு நன்றியினையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதே நேரத்தில், புனித தோமையார் மலை ஒன்றியத்திற்குட்பட்ட அனைத்து ஊராட்சிகளிலும் இளைஞர்கள்

2022 மே 9]

பயன்பெறுகின்ற வகையில் தனியாருக்கு நிகராகக் குளிரூட்டப்பட்ட வசதி கொண்ட நவீன உடற்பயிற்சிக் கூடங்களை அமைக்க அரசு முன்வர வேண்டுமென மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்டு விடைபெறுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

முற்பகல் 10–40

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புனித தோமையார் மலை ஒன்றியத்தைப் பொறுத்தவரையில், ஏற்கெனவே 15 ஊராட்சிகள் இருக்கின்றன. 15 ஊராட்சிகளும் 4 சட்டமன்றத் தொகுதிகளில் உள்ளடங்கியிருக்கின்றன. தாம்பரம், பல்லாவரம், ஆலந்தூர் மற்றும் சோழிங்கநல்லூர் ஆகிய 4 தொகுதி சட்டமன்ற உறுப்பினர்களும் அந்தந்தப் பகுதிகளுக்குத் தேவையான கோரிக்கைகளைத் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள். காரணம் என்னவென்றால், அந்த ஊரகப் பகுதிகளில் ஊராட்சி அமைப்புப் பிரதிநிதிகள் ஏற்கெனவே தேர்ந்தெடுக்கப்பட்டு நிர்வாகம் நடைபெற்று வருகிறது. சமீபத்தில் அது தாம்பரம் மாநகராட்சியில் இணைக்கப்பட்டிருக்கிறது. ஆகவே, மக்கள் என்ன நினைக்கிறார்கள் என்றால், நாம் மாநகராட்சிக்குள் வந்து விட்டோம், இந்தப் பகுதிகளில் ஊரக வளர்ச்சித் துறை அதிகாரிகள் சரியாகச் செயல்படாமல் விட்டுவிடுவார்களோ என்ற அச்சம் இருக்கிறது. அவர்களுக்கு அந்த அச்சம் தேவையில்லை. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானால், பெண்கள் பிறந்த வீட்டிலிருந்து புகுந்த வீட்டிற்குச் செல்லுகின்றபோது, என்ன மரியாதையோடு அனுப்பிவைக்கப்படுவார்களோ, அதேபோன்று, ஊரக வளர்ச்சித் துறையிலிருந்து நகராட்சி நிருவாகத்திற்கு செல்லுகின்ற அவர்களுக்கு அனைத்து வசதிகளும் செய்து தரப்படும் என்பதைத் தங்கள் மூலமாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. கடம்பூர் ராஜு அவர்கள்.*

திரு. கடம்பூர் ராஜூ: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இளையரசனேந்தல் பிர்கா பகுதியில் 12 ஊராட்சிகள். ஊராட்சி அமைப்பில் மட்டும் தென்காசி மாவட்டத்திலும்*

மற்றும் நிருவாக ரீதியாக அனைத்துப் பிற துறைகளும் தூத்துக்குடி மாவட்டத்திலும் இருக்கின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பொது மக்களின் கோரிக்கையை ஏற்று, நிருவாக வசதிக்காக உள்ளாட்சி அமைப்பிலும், அந்தப் பகுதியை தூத்துக்குடி மாவட்டத்தில் அமைத்திட முன் வருவார்களா என்று கேட்டு அமைகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதுகுறித்து ஏற்கெனவே துறையின் கவனத்திற்கு வந்திருக்கிறது. இரு மாவட்ட ஆட்சித் தலைவர்கள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்களுடன் கலந்து பேசி தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள்.*

முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சூரியன் உதிக்கும் நாடு* Japan; *சூரியன் மறையும் நாடு* Norway.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர், சூரியன் முதன்முதலில் உதிக்கும் நாடு* Japan.

முனைவர் கோவி. செழியன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆனால், சூரியன் ஆளும் நாடு, தமிழ்நாடு என்ற வரலாற்றுப் பெருமையை (மேசையைத் தட்டும் ஒலி) உருவாக்கியிருக்கிற மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு நன்றி கூறிக்கொள்கிறேன்.*

மாண்புமிகு சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட அனைத்து ஊராட்சிகளிலும் ஆண்கள், பெண்கள் இருபாலருக்கும் உடற்பயிற்சி நிலையம் அமைக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்தார். கும்பிட்ட கை விலகும் முன் கோரிக்கையை நிறைவேற்றுகிற நமது அரசு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிறைவேற்றித் தரப்படும் என்று அறிவித்திருக்கிறார். ஆனாலும்கூட இளம் வயது மாணவர்களான ஆண்கள் மற்றும் பெண்கள் விளையாட்டுப் பயிற்சிகளில் ஈடுபடுகிறபொழுது,

2022 மே 9]

சாலைகளில், வீட்டு மாடிகளில் அல்லது பூங்காக்களில் நடை பயிற்சி மேற்கொள்வதற்கான வாய்ப்பு உண்டு. இல்லங்களில் இருக்கக்கூடிய குடும்பத்துப் பெண்கள் மற்றும் அனைத்து ஆண்களும் இன்றைய காலகட்டத்தில் தொலைக்காட்சியைப் பார்க்கப் பார்க்க தங்களுடைய உடலை நன்றாக வைத்துக்கொள்ள வேண்டும் என்று எண்ணுகிறார்கள். எனவே, அனைத்து ஊராட்சி ஒன்றியங்களிலும் பெண்களுக்கென்று தனியாக உடற்பயிற்சிக் கூடம் அமைத்துத் தரப்படுமா என்ற கோரிக்கையை இந்த நேரத்தில் வைத்து அவ்வாறு அரசு அமைக்குமேயானால், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்தும்கூட அதற்கான உபகரணங்கள் வாங்குவதற்கு வழிவகையை உருவாக்கித் தர வேண்டுமென்று கேட்டு, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் செய்வார்களா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாகக் கேட்டு அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மகளிர்மேல் இவ்வளவு அக்கறை இருக்கிறது. நன்றி. மாண்புமிகு ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. கேஆர். பெரியகருப்பன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் முனைவர் கோவி. செழியன் அவர்கள் எழுப்பியிருக்கின்ற வினா நல்ல வினாதான். மாண்புமிகு நம்முடைய முதலமைச்சர் அவர்களும் தொலைநோக்குப் பார்வையோடு, எதிர்காலச் சந்ததியினரை ஆரோக்கியமாக உருவாக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு திட்டமிட்டுச் செயல்பட்டு வருகிறார்கள். அந்தவகையில்தான், சிறுவர் சிறுமிகளுக்கு, குறிப்பாக 6 வயதுக்குட்பட்டவர்களுக்குக்கூட அவர்கள் ஊட்டச்சத்து குறைவில்லாமல், ஆரோக்கியத்தோடு இருக்க வேண்டும் என்பதற்காக நேற்றைய முன்தினம், ஓராண்டு நிறைவு, இரண்டாம் ஆண்டு துவக்கத்தில் காலை சிற்றுண்டி திட்டத்தை அறிவித்திருக்கிறார்கள். உணவு மட்டுமல்ல, உடல் நலமாக இருப்பதற்கு, வலுவாக இருப்பதற்கு உடற்பயிற்சி அவசியம் தேவை. அது ஆண்களுக்கும் தேவை, பெண்களுக்கும் தேவை என்பதை உணர்த்தியிருக்கிறார். ஏற்கெனவே, அதனுடைய முக்கியத்துவத்தை உணர்ந்த நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 2006 முதல் 2011 வரையிலான ஆண்டுகளில், உள்ளாட்சித் துறை அமைச்சராக இருந்த நேரத்தில் அனைத்து கிராம அண்ணா மறுமலர்ச்சித் திட்டத்தின் மூலமாக அனைத்து ஊராட்சிகளிலும்*

அதுபோன்ற உடற்பயிற்சிக் கூடங்களை அமைத்தார்கள். இப்பொழுது இன்னும் நவீனமயமாகத் தேவைப்படுகின்ற நேர்வில் அதனையும் எதிர்காலத்தில் நிறைவேற்றித் தருவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களோடு கலந்து பேசி, உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 246, மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. ராஜன் செல்லப்பா, மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள்.

246—

வாசனை திரவியத் தொழிற்சாலை

***3129—திரு. வி.வி. ராஜன் செல்லப்பா:**

மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பரங்குன்றம் தொகுதி, வளையங்குளத்தில் வாசனை திரவியத் தொழிற்சாலை அமைக்க அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் தொகுதி, வளையங்குளம் பகுதியில் நறுமணத் தொழிற்சாலை அமைக்கும் செயற்குறிப்பு தற்போது அரசிடம் இல்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. வி.வி. ராஜன் செல்லப்பா அவர்கள்.

திரு. வி.வி. ராஜன் செல்லப்பா: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்பரங்குன்றம் தொகுதி, வளையங்குளம் பகுதியைச் சுற்றியுள்ள சுமார் 15 கிராமங்களில் அதிகமாக மலர் விவசாயம் நடைபெற்று வருகிறது. குறிப்பாக பெரும்பிடுகு முத்தரையரை வணங்கக்கூடிய மிகவும் பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தைச் சேர்ந்த மலர் விவசாயிகள் அதிகம் வசிக்கக்கூடிய பகுதி. மல்லிகை